ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2095/47 - 2018 නොවැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2018.11.02
*2095/47 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***2017 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்***

*அண்மைக் காலத்தில் பயங்கரவாதப் போராளிகளின் அல்லது வேறு குழுக்களின் நடவடிக்கைகளின் பயனாக உள்ளூர இடம்பெயர்ந்தவர்களும் வேறொரு இடத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களுமான இலங்கைப் பிரசைகளுக்கான குறைநிரப்புப் பட்டியல் – 2018*

மேற்குறித்த விடயம் தொடர்பான குறைநிரப்பு பட்டியலைத் தயாரிப்பதற்காக விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2018.11.01 ஆந் திகதியுடன் முடிவடைந்துள்ளது. தேருநர்களைப் பதிவு செய்தல் விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கிணங்க அக்குறைநிரப்புப் பட்டியலில் தனது பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமை இருப்பினும் தனது பெயர் குறைநிரப்புப் பட்டியலில் உட்சேர்க்கப்பட்டிராத எவரேனும் ஒருவர் தனது பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்காக அல்லது தொடர்ந்தும் வைத்துக்கொள்வதற்காக விடயத்திற்கேற்றவாறு மேன்முறையீடு சமர்ப்பிப்பாராயின் அவ்வாறு மேன்முறையீடு சமர்ப்பிக்கின்றவர் அது தொடர்பாக மேற்குறித்த தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க வெளியிடப்பட்டுள்ள படிவத்திலான கோரிக்கையொன்றை அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதி முதல் இரண்டு வார காலப்பகுதியினுள் (2018.11.15 ஆந் திகதி வரை) இது தொடர்பான அனைத்து விண்ணப்பப்பத்திரங்களையும் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கப்பெறல் வேண்டும்.

மேற்குறித்த தேர்தல் மாவட்டத்திற்குரிய குறைநிரப்புப் பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள யாரேனும் ஒருவருக்கு தனது பெயர் அல்லது அப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எவரேனும் ஒருவரின் பெயர் அத்தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பாக அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற ஆட்சேபனைகளை மேற்படி சட்டத்தில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு விடயத்திற்கேற்ப “ஈ” படிவத்திற்கிணங்கியவாறு இரண்டு பிரதிகளில் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படல் பற்றித் தெரிவிக்கப்படுகின்ற அனைத்து ஆட்சேபனைகளும், குறித்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வார காலப்பகுதியினுள் (2018.11.15 ஆந் திகதி வரை) அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

1A-G 28847 — 37 (2018/11)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஏதேனுமோர் உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்காகவும் எவரேனும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்க்குமாறு அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்குமாறு வேறு எவரேனுமொருவரால் செய்யப்படுகின்ற உரிமைக் கோரிக்கைக்கும் ஆட்சேபனைத் தெரிவித்தலுக்கும் தேவையான படிவங்களை அந்தந்த நிருவாக மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

எச். எம். ரீ. டீ. ஹேரத்,
செயலாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
2018, நவெம்பர் 02.

11-775

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.